முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 385/2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சண்முகம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | லோகநாதன் |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| வட்டம் | .. | |

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் நாள் சனிக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் பட்டுத்தறி தொழில் செய்து வருகிறேன். நான் 25 பட்டுத்தறி வைத்துள்ளேன். மொத்தமாக 25 பேர் வேலை செய்து வருகிறார்கள். அதுபோல் தான் பிரதிவாதிகளும் என்னுடன் வேலை செய்து வருகிறார்கள். பிரதிவாதிகள் 2017 ஆம் ஆண்டு முதல் வேலை செய்து வருகிறார்கள். நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். தொழில் செய்பவர்களை தவிர மீதி நபர்களுக்கு கடன் கொடுப்பேன் என்றால் இல்லை. அதேபோல் தொழில் செய்து வருபவர்களின் கடன் கணக்குகளை பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த கணக்கு நோட்டுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன் என்றால் இருக்கிறேன். பிரதிவாதிகளுக்கு எத்தனை தவணைகளாக கடன் கொடுத்தேன் என்றால் 7 தவணைகளாக கடன் கொடுத்தேன். நான் கையிலிருந்து தான் பணத்தை பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். 2016 ஆம் ஆண்டிற்கு பிறகு ரூ.2,00,000/-க்கு

மேல் பண பரிவர்த்தனையை வங்கி மூலம் தான் பராமரிக்கப்படவேண்டும் என்றால் தெரியாது. மேற்படி தொகையை என் வீட்டில் வைத்து தான் பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். கருணேஷ்வரன், சிவக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் தான் பணம் கொடுத்தேன். பாண்டை எழுதியவர் என் ஊரை சேர்ந்த கன்னியப்பன் என்றால் சரிதான். சாட்சி கையொப்பம் செய்தவர்கள் என் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த தொகை சம்மந்தமாக ஊர் பஞ்சாயத்து 2021 ஆம் ஆண்டு நடந்தது. அப்போது யார்யார் பஞ்சாயத்து செய்தார்கள் என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. என்னை மிரட்டும் தோனியில் பஞ்சாயத்து செய்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மாணிக்கம் என்பவர் பஞ்சாயத்து செய்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்து தான் மாணிக்கம் தலைமையில் பஞ்சாயத்து நடந்தது என்றும் ஆனால் உடல்நிலைசரியில்லாமல் இருந்ததாக வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால் சரியல்ல. என்னிடம் கடன் வாங்கியவர்களின் சொந்த ஊர் சிறுங்கட்டூர் என்றால் சரிதான். அந்த ஊரின் பெயரில் தான் பாண்டு எழுதிக்கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். முதலில் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பினேன்., அங்கு இல்லாததால் செய்யாறு விலாசத்திற்கு அனுப்பினேன். ஆள் இல்லை என்று தான் திருப்பி அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. தாவாவில் வாங்க மறுத்துவிட்டார் என பொய் சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 30.12.2021 ல் எந்தவித கடனும் பிரதிவாதிகள் வாங்கவில்லை என்றும் அதற்கு முன்பாக வாங்கிய கடனுக்காக கொடுத்த புரோநோட்டை தவறுதலாக பயன்படுத்தி பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. காலதாமதமாக அறிவிப்பு பெறப்பட்டு தான் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வாங்கிய ரூ.2,50,000/-க்கு பைசல் பேசப்பட்டு அதை நானும் ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல பிரதிவாதிகளுக்கு காலஅவகாசம் கொடுக்காமல் உடனடியாக இந்த வழக்கை

தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2017 ஆம் ஆண்டு என்னிடம் வேலைக்கு சேர்ந்ததாகவும் அப்போது ரூ.1,00,000/- கடன் வாங்கியதாகவும் அதை முறையாக திருப்பி செலுத்திவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு திருப்பி செலுத்தியதால் தான் நம்பிக்கையின் பேரில் திரும்ப பணம் கொடுத்தேன். அவர்கள் பணிபுரிந்த காலத்தில் கூலி தொகையை முழுமையாக கொடுக்கமால் வட்டிக்காக பிடித்தம் செய்து தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதேபோல கூலி முழுமையாக கொடுக்க முடியாத நிலையில் பிரதிவாதிகள் கேட்டதற்கு மேலும் கடன் வாங்கிக்கொள்ள சொன்னதால் தான் மேலும் ரூ. 1,00,000/- கடன் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. 2018 ல் கடன் வாங்கியதற்கும் அவர்கள் முறையாக வட்டி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2020ஆம் ஆண்டு கொரோனா காலத்திலும் என்னிடம் பிரதிவாதிகள் வேலை செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு தலா ரூ.1,00,000/-மும் அதன்பிறகு 2019 ஆம் ஆண்டு ரூ.50,000/-மட்டுமே பிரதிவாதிகள் கடன் வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட தொகைக்கு ஆகஸ்ட் 2021 ஆம் ஆண்டுவரை முறையாக வட்டி செலுத்தி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. கடனை திருப்பி செலுத்தியபிறகும் பிரதிவாதிகள் நம்பிக்கையின் பேரில் புரோ நோட்டை திரும்ப கேட்காமல் இருந்தனர் என்றும் ஆனால் நான் அதை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புரோநோட்டிற்கு மறுபயன் ஏதும் பிரதிவாதிகள் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் ரூ.7,00,000/- கடன் வாங்கியதற்கு தான் இந்த புரோநோட்டு என்றும் அதற்கு முன்பு வாங்கிய கடன்களை பிரதிவாதிகள் முறையாக திருப்பி செலுத்தி விட்டார்கள்.